திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த டிப்டி தாசில்தார் லிஸ்ட் இதுகாறும் காலதாமதப்பட்டிருக்கிற காரணத்தால், பலருடைய கிளெய்ம்ஸ் அண்டு அப்ஜெக்ஷன்ஸ் காலாகாலத்தில் போடுவதற்கு தகுந்த சாவகாசம் ஏற்படவில்லை. அதனால் உடனடியாக அவர்களுடைய கிளெய்ம்ஸ் அண்டு அப்ஜெக்ஷனை டிஸ்போஸ் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 1968-69-ம் ஆண்டு பட்டியல் தயாரானதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. சில பேருக்கு வயது விலக்கு அளிக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திற்கு அந்த பட்டியல் 25—11—71-ல் தான் வந்திருக்கிறது. விரைவில் ஆணை பிறப்பிக்கப் படும். இனிமேல் இவ்விதக் காலதாமதம் ஏற்படக்கூடாது என்று மாவட்ட கலெக்டருக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

Employment Exchanges, Nandanam

* 269 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the office of the Employment Exchanges in Madras City is to be shifted to new building from the present place at Nandanam ; and

(b) if so, the reasons thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நந்தனத்திலுள்ள வேலை தேடித்தரும் அலுவலகங்கள் வீட்டு வசதிப் பிரிவின் பழைய கட்டடத்தில் அமைக்கப் பெற்றுள்ளன. இக்கட்டிடம் தற் போது குடிசைமாற்று வாரியத்தின் பணியாவர்களை அமர்த்த தேவைப்படு கிறது.

Survey on employment opportunities in Dharmapuri district

* 270 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any survey is conducted in Dharmapuri district to solve the unemployment problem among the age groups of 12 to 20 years with the help of UNICEF ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இது ஒரு முன்னோடி ஆய்வுப் பணியாகும். இது இந்தியாவில் இரண்டு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. அவையாவன : மகா ராஷ்டிரத்திலுள்ள ஆமதாபாத், தமிழ்நாட்டிலுள்ள தருமபுரி ஆகியவையாகும். கிராமப்புற இளைஞர்களுக்கு, குறிப்பாக பள்ளியிலிருந்து நின்றுவிட்ட (11 வயதுமுதல் 22 வயது வரையுள்ள தொகுதியினர்) இளைஞர்களுக்கு உள்ள வேலை வாய்ப்புகளைப்பற்றி மதிப்பிடுவதே இந்த ஆய்வுப் பணியின் நோக்க மாகும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in the month of September an Officer of the Central Government in connection with the UNICEF came to Hosur from Delhi. He remained for three days at Hosur and collected statistics with regard to school

drop-outs. I was with him. He selected 3 villages for this work. He said that he had discussed with the District Collector and prepared proposals. He told me that he would send the proposals to the State Government. May I know whether the Government have received a copy of the proposals?

THE HON. THIRU S. MADHAVAN : It is an information to the Government.

கோவை மாவட்டத்தில் பின்தங்கியவர்களுக்கு தொழில் பயிற்சி

*271 வினு—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பின்தங்கியவர்களுக்காக தொழில் பயிற்சிக் கூடங்கள் ஏதேனும் அரசு அமைத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் பின்தங்கிய மக்கள் நிறையபேர் படித்துவிட்டு வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க தொழில் பயிற்சிக் கூடங்களை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்பயிற்சிக் கூடங்களிலே படித்து விட்டுத்தான் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அம்மாதிரி தொழிற் பயிற்சிக் கூடங்கள் தேவையில்லை என்று கருதுகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் கனிவளங்கள்

*272 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் கனிவளங்கள் உள்ளன என்று ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஓர் அறிக்கை @ அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில், கடலூர் பகுதியில் புதிய ரக கனிவளம் கிடைப்பதாக ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அதை விரைவுபடுத்தி, அந்தப் பகுதியில் ஒரு சிறு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட தகவல் வருமானல் பரிசீலிக்கப்படும்.

அலுமினியம் தொழிற்சாலை

*273 வினு—திரு. துரைமுருகன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

தனியார் துறையிலோ அன்றி பொதுத்துறையிலோ அலுமினிய தொழிற்சாலை தமிழ்நாட்டில் அமைக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

@ 171-173-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.